[திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்] [1987 மே 4

கடைசியாக, செஞ்சியில் காவலர்களுக்கு என்று 23 வீடுகள் இருக்கின்றன. அந்த வீடுகள் இன்று விழுமோ அல்லது நாளை விழுமோ என்ற நிலையில் இருக்கின்றன. அதை மாற்றி விரைவில் புதிய வீடுகளைக் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். செஞ்சி தாலுக்கா ஹெட்குவார்ட்டர்ஸ் காவல் நிலையத்தில் கைதிகளை வைக்க ஒரு லாக் அப்பை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு காவல் நிலையத்திலே Lantern and Van தேவை. வேன் இல்லாததால் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியவில்லை. இவைகள் எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. முருகானந்தம் அவர்கள் கோரிக்கைகள். அவைகளையும் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (5–5–1987) காலை 10-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-06 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

90. தமிழ்ப் பல்கலைக்கழக இணை வேந்தரால் மூன்று உறுப் பினர்களை ஆட்சிப் பேரவைக்கும், ஒரு உறுப்பினரை ஆட்சிக் குழுவிற்கும் நியமனம் செய்வது குறித்து கல்வித் துறையின் 25–6–1986 ஆம் நாளிட்ட 47541/என்.யு./86-2 ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1982) 49 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

91. தமிழ்ப் பல்கலைக்கழக வேந்தரால் ஆட்சிப் பேரவைக்கு ஐந்து உறுப்பினர்களை நியமிப்பது குறித்து கல்வித் துறையின் 30—6—1986 ஆம் நாளிட்ட 52776/என். யு. 2/86-1 ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1982) 49 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

1987 மே 4]

92. பேராசிரியர் எஸ். அகஸ்தியலிங்கம் அவர்களை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக நியமனம் செய்வது குறித்து கல்வித் துறையின் 4-12-1986 ஆம் நாளிட்ட 1958 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1982 ஆம் ஆண்டு தமிழ் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1982) 49 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

93. 1981-82 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பதினொராவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-எ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

94. 1982-83 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-எ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).] (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

210. தமிழ்நாடு காவல்துறை குறித்த ஆய்வுரை, 1986—87 (தமிழ், ஆங்கிலம்).

211. கோரிக்கை எண் 16—தமிழ்நாடு நியமனப்புத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1987—88 (தமிழ், ஆங்கிலம்).

212. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் மூன்றாவது அறிக்கை.